# ***DEPOSITION OF WITNESS***
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No. 523/2024

## PW: 7

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு. திருநாவுக்கரசு | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.மகாலிங்கம் | Calling : | LW20 |
| Village : | கும்பகோணம் | Age : | 61 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 23rd day of June 2026.

Signature of Witness.

(Accused present. Assistant Public Prosecutor Grade II Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சீனிவாசநல்லூரில் வசித்து வருகிறேன். கடந்த 29.07.2024-ஆம் தேதி கும்பகோணம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கும்பகோணம் தலைமை மாவட்ட மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று பார்த்தபோது காயம்பட்ட ரமேஷ் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்று விட்டதால் மறு நாள் 30.07.2024 அன்று தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ரமேஷ்பாபு வயது 34, த/பெ ராசு என்பவரை பார்த்தபோது

அவர் பேச முடியாத மயக்க நிலையில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த சிவசந்திரன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து காலை 11.00 மணிக்கு கும்பகோணம் போக்குவரத்து புலன் விசாரணைபிரிவு குற்ற எண்.54/2024 சட்டப்பிரிவு 281, 125(a) BNS ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். பின்னர் அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துராமலிங்கம், ராஜாராம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.

2) பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள்செல்வராஜ், ஆகாஷ், விஜய் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று காயம்பட்ட ரமேஷ்பாபுவை பார்த்தபோது அவர் தொடர்ந்து மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த சிவசந்திரன் மற்றும் அவரது தந்தை ராசு ஆகியோரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்தேன். பின்னர் சிகிச்சையில் இருந்த ரமேஷ்பாபு சிகிச்சை பலன் அளிக்காமல் 01.08.2024 ஆம் தேதி இறந்து விட்டார் என கிடைத்த தகவலை பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 281, 125(a) BNS விலிருந்து 281, 125(a), 106(1) BNS ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்தேன்.

அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் இவ்வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு.சிவசெந்தில்குமார் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

3) வழக்கு சம்பவத்தில் இறந்து போன ரமேஷ் பாபுவும் எதிரியும் ஒரே வாகனத்தில் சென்றனர் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பிற்பாடு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் இந்த எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மாடு குறுக்கே வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by her to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*